(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 9(7).]

# பாராளுமன்றம்

## 9ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2013 நவெம்பர் 08 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2013 திசெம்பர் 18, புதன்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4077/ '13

கௌரவ எஸ். சிறீதரன்,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 ஆம் ஆண்டில் சிறுபோகத்தின்போது ஏற்பட்ட வரட்சி காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் நெற் செய்கைக்கு ஏற்பட்ட பாதிப்பு யாதென்பதையும்;

(ii) மேலே குறிப்பிட்டுள்ளவாறு, நெற் செய்கைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கு இதுவரை விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iii) 2012-2013 காலப்பகுதியில், கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும்போகத்தின் போது வெள்ளப்பெருக்கு காரணமாக பாதிக்கப்பட்ட வயற்காணிகளின் அளவு எத்தனை ஏக்கர் என்பதையும்;

(iv) வெள்ளப்பெருக்கு காரணமாக விவசாயிகளுக்கு ஏற்பட்ட பாதிப்பு யாதென்பதையும்;

(v) மேற்படி விவசாயிகளின் நெற் செய்கைக்கு ஏற்பட்ட பாதிப்புக்காக இதுவரை நிவாரணம் வழங்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4159/ '13

கௌரவ துனேஷ் கங்கந்த,— பிரதம அமைச்சரும் புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013ஆம் ஆண்டில் மஹபொல புலமைப் பரிசில் நிதியத்திலிருந்து பயன்பெறும் பல்கலைக்கழக மாணவ மாணவியரின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தற்போது பல்கலைக்கழக மாணவர் ஒருவருக்கு வழங்கப்படும் மாதாந்த மஹபொல புலமைப் பரிசில் தவணைப் பணத்தின் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(iii) ஆறு ஆண்டுகளுக்கும் அதிக காலமாக அதிகரிக்கப்படாதுள்ள தற்போதைய மாதாந்த புலமைப்பரிசில் தவணைப் பணத் தொகை நிலவுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளுக்கு ஒப்பீட்டளவில் பல்கலைக்கழக மாணவர் ஒருவருக்கு எவ்விதத்திலும் போதுமானதாக இல்லையென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், தற்போதைய பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் மற்றும் புலமைப் பரிசில் தவணைப் பணம் அதிகரிக்கப்படாத காலப்பகுதி ஆகிய விடயங்களைக் கவனத்தில் கொண்டு குறித்த கொடுப்பனவை குறைந்தபட்சம் ரூபா ஐயாயிரம் (ரூ.5000/=) வரை அதிகரிப்பது தொடர்பாக கவனம் செலுத்துவாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4213/ ’13

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் அரச மருத்துவமனைகளுக்கு உணவு, பானங்களை வழங்கிய பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் யாவர் என்பதையும்;

(ii) மேற்படி வழங்குநர்களுக்கு அந்தந்த ஆண்டுகளில் செலுத்த வேண்டியுள்ள மொத்தப் பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) இன்றளவில் செலுத்தி முடிக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) செலுத்த வேண்டியுள்ள நிலுவைப் பணத் தொகை அந்தந்ந ஆண்டுகளுக்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட மூன்றாண்டுகளில் அரச மருத்துவமனைகளுக்கு உணவு, பானங்களை வழங்கிய வழங்குநர்களுக்கு மேற்படி நிலுவைப் பணத் தொகைகள் கிடைக்காத காரணத்தினால் பெரும் சிரமங்களை எதிர் கொண்டுள்ளார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நிலுவைப் பணத் தொகைகளை செலுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிலுவைப் பணத் தொகைகள் செலுத்தி முடிக்கப்படும் திகதி யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4322/ ’13

கௌரவ ஜோன் அமரதுங்க,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வத்தளை பிரதேச செயலாளர் பிரிவில் களு எல கால்வாய் கருத்திட்டத்தின் கீழ், வெலிசர வெடிமருந்துக் களஞ்சியத்திற்கு அருகில் ஹொரப்பே புகையிரத நிலையத்தை நோக்கியதாக சுமார் 200 மீற்றர் அளவில் உத்தேசிக்கப்பட்டிருந்த வழியை மாற்றியமைத்து காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினால் கால்வாயொன்று வெட்டப்படுகின்றது என்பதையும்;

(ii) வெடிமருந்துக் களஞ்சியத்தின் பாதுகாப்புக்காக கடற் படை விடுத்த வேண்டுகோளுக்கமைய குறித்த கால்வாய் செல்கின்ற வழி மாற்றப்படுகின்றதா என்பதையும்;

(iii) வெட்டப்படுகின்ற கால்வாய்க்குக் குறுக்காக காணப்படும் தனியார் வயற்காணிகள் சார்பில் குறித்த வயற் காணிகளின் உரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகைகள் வழங்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனின், அத்திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4331/ '13

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1956 ஆம் ஆண்டில் வங்கி ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ஓய்வூதிய நலன்கள் 1972 இல் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் இரத்துச் செய்யப்பட்டு மீண்டும் 1977 இல் மீளத்தாபிக்கப்பட்டதுடன், 1996 இல் மீண்டுமொருமுறை பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் இரத்துச் செய்யப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 1996 சனவரி 01 ஆம் திகதியின் பின்னர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அரசாங்க வங்கி ஊழியர்களுக்கு 2009 சனவரி 01 ஆம் திகதி முதல் ஓய்வூதிய உரித்து வழங்கப்படுமென நிதி, திட்டமிடல் அமைச்சர் வெளியிட்டுள்ள கூற்றுக்கு அமைய மேற்படி ஊழியர்களுக்கு குறித்த நலன்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி திகதி யாது என்பதையும்;

(iii) மேற்படி ஓய்வூதிய நலன்கள் வழங்கப்படவில்லையெனின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) திறைசேரிச் செயலாளரினால், அந்தந்த அரச வங்கிகளுக்கு தாங்கிக் கொள்ளக்கூடிய ஓய்வூதியத் திட்டமொன்றை தாபிப்பதற்காக 2011.05.19 ஆம் திகதி எழுத்து மூலமான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) வங்கி அலுவலர்கள் மேற்படி கட்டளையை அமுல்படுத்தாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) இலங்கை வங்கியின் முகாமைத்துவத்தின் சிபாரிசின் பேரில் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு திறைசேரியின் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ள 2012.05.23 ஆம் திகதிய ஓய்வூதிய பிரேரணை இதுவரை அங்கீகரிக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

## (2013 திசெம்பர் 18, புதன்கிழமை)

3736/ '13

கௌரவ மொஹமட் அஸ்லம்,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பேராதனை, கிறிஸ்ரோபர் வீதி, 124டி இலக்கத்தில் வசிக்கும் எச்.எல். பிரேமசந்திர, (சேவை இலக்கம் 1060814) இலங்கை வங்கியின் கந்தப்பொளை கிளையில் நிறைவேற்று உத்தியோகத்தராக கடமையாற்றியபோது, குற்றச்சாட்டு ஒன்றின் பேரில் 2000.04.18ஆம் திகதி சேவை இடைநிறுத்தப்பட்டு, குற்றச்சாட்டினை நிரூபிக்க முடியாத நிலைமையின் கீழ் 2001.05.14ஆம் திகதி மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்ட ஒருவராவார் என்பதையும்;

(ii) 2010.03.09ஆம் திகதியிலிருந்து 2010.05.16ஆம் திகதி வரை இவர் கடமை லீவில் விடுவிக்கப்பட்டிருந்தார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இலங்கை வங்கியின் பேராதனைக் கிளையில் தற்போது கனிஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர் பதவி வகிக்கும் திரு. பிரேமசந்திரவுக்கு, 2000ஆம் ஆண்டுக்கு முன்னர் நிலவிய நிறைவேற்று உத்தியோகத்தர் சேவை நிலைமையைக் கவனத்தில் கொண்டு நிலுவைச் சம்பளம் உட்பட்ட ஏனைய பணியாளர் உரிமைகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2013 திசெம்பர் 19, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4078/ '13

கௌரவ எஸ். சிறீதரன்,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தில் சர்வதேச தரத்திலான ஒரு விளையாட்டரங்கு அமைக்கப்படுமா என்பதையும்;

(ii) மேற்படி விளையாட்டரங்கினை அமைப்பதற்காக பணத்தைப் பெற்றுக்கொள்ளும் விதம் யாதென்பதையும்;

(iii) குறித்த நிர்மாணக் கருத்திட்டத்திற்காக விலை மனுக்கள் கோரப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், மேற்படி நிர்மாணிப்பை மேற்கொள்ளும் ஒப்பந்தகாரர் யார் என்பதையும்;

(v) இக்கருத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்;

(vi) மேற்படி விளையாட்டரங்கின் நிர்மாணக் கருத்திட்டத்தை நிறைவுசெய்ய எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4306/ '13

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்நாட்டிலுள்ள அரச வைத்தியசாலைகளின் எண்ணிக்கையையும்;

(ii) இந்நாட்டில் 'காந்த நாடி அதிர்வு உருக்காட்சி ஸ்கேனர்களைக்'(MRI scanner) கொண்டுள்ள அரச வைத்தியசாலைகளின் எண்ணிக்கையையும்;

(iii) MRI ஸ்கேனர்களைக் கொண்டுள்ள அரச வைத்தியசாலைகளின் பெயர்களையும் மேற்கூறிய ஒவ்வொரு வைத்தியசாலைகளிலும் காணப்படும் MRI ஸ்கேனர்களின் எண்ணிக்கையை தனித்தனியாகவும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) அரச வைத்தியசாலைகளில் நாளாந்த அடிப்படையில் MRI ஸ்கேனர்களின் பயன்பாடு தேவைப்படும் நோயாளிகளின் சராசரி எண்ணிக்கையையும்;

(ii) அரச வைத்தியசாலைகளில் காணப்படும் MRI ஸ்கேனர்கள் இவ்வுபகரணத்துக்கான தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்கு போதுமாக உள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், MRI ஸ்கேனர் பரிசோதனைகளைப் பெற்றுக்கொள்ள நோயாளிகளுக்குள்ள மாற்று வழிமுறைகளையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4339/ '13

கௌரவ அருந்திக்க பெர்னாந்து,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1980 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட அமைச்சரவை அங்கீகாரத்திற்கேற்ப பல்மாடி வாகன தரிப்பிடமொன்றை நிர்மாணிப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சாட்டப்பட்ட கொழும்பு கோட்டை செத்தம் வீதியில் அமைந்துள்ள 95 பர்சஸ் காணியில் மேற்படி வாகன தரிப்பிடத்தை நிர்மாணிக்கும் கருத்திட்டம் இவ்வதிகார சபையினால் நடைமுறைப் படுத்தப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) இக்காணி சவுத் ஈஸ்ட் ஏசியா கன்ஸ்ட்ரக்ஷன் கம்பனி (பிரைவேட்) லிமிட்டெட் எனும் கம்பனிக்கு முதலாவதாக குத்தகைக்கு வழங்கப்பட்டு பின்னர் அக்கம்பனிக்கு உரித்துரிமைக்கு விற்பனை செய்யப்பட்டமை சட்டபூர்வமானதா என்பதையும்;

(iii) இற்றைவரை எவ்வித அபிவிருத்தி நடவடிக்கைக்கும் பயன்படுத்தப்படாதுள்ள இக்காணியை மீண்டும் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4415/ '13

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குளியாபிட்டிய நகரில் வசிக்கும் மக்கள் தமது குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி சிரமங்களை தவிர்ப்பதற்காக துரிதமாக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் இனங்காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) இந்நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

(iv) குளியாபிட்டிய நகரில் வசிக்கும் மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக பயன்படுத்தக் கூடியதென இனங்காணப்பட்டுள்ள நீர் மூலங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4430/ '13

கௌரவ (திருமதி) தலதா அத்துகோரல,— கல்விச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கோதுமை மாவினால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் மற்றும் குளிர் பானங்கள் பாடசாலைச் சிற்றுண்டிச்சாலைகளில் விற்பனை செய்யப்படுவதைத் தடைசெய்து 2011 ஆம் ஆண்டு சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி சுற்றறிக்கை தற்போதும் வலுவிலுள்ளதா என்பதையும்;

(iii) சகல பாடசாலைகளும் தற்போது மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுகின்றதா என்பதையும்;

(iv) மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படாத பாடசாலைகள் இருப்பின் அப் பாடசாலைகள் சம்பந்தமாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மகிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு பின்தங்கிய பாடசாலைகளுக்கு மதிய போசனம் வழங்கும் வேலைத் திட்டம் தொடர்ந்தும் நடைமுறையிலுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது நடைமுறையிலுள்ள பாடசாலைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2013 திசெம்பர் 20, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4161/ '13

கௌரவ துனேஷ் கங்கந்த,— பிரதம அமைச்சரும் புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர்களையும் சனாதிபதியின் ஆலோசகர்களையும் நியமிக்கும்போது கடைப்பிடிக்கப்படும் நடைமுறை யாதென்பதையும்;

(ii) மேற்படி பதவிகளுக்கு நியமிக்கும்போது கவனத்தில் கொள்ளப்படும் குறைந்தபட்ச கல்வித் தகைமைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4308/ '13

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அறிவுடைச் சமூகத்திற்கான கல்விச் செயற்றிட்டத்தின் (EKSP) கீழ் பாடசாலைகளுக்கு கணினிகள் வழங்கப்பட்டனவா என்பதையும்;

(ii) அவ்வாறெனின், மேற்கூறிய கருத்திட்டத்தின் கீழ் கணினிகள் வழங்கப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கையையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) 2012 டிசம்பரில் உள்ளவாறு,

(i) EKSP கருத்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட கணினிகளின் எண்ணிக்கையையும்;

(ii) கணினி கொள்வனவுக்கான ஒப்பந்தங்கள் வழங்கப்பட்ட வழங்குனர்களின் பெயர்களையும்;

(iii) வழங்கப்பட்ட ஒவ்வொரு ஒப்பந்தத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட கணினிகளின் எண்ணிக்கையையும்;

(iv) வழங்கப்பட்ட ஒவ்வொரு ஒப்பந்தத்தின் கீழ் வழங்குனருக்கு/ வழங்குனர்களுக்கு செலுத்தப்பட்டுள்ள விலையையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) EKSP கருத்திட்டத்திற்கான கணினி வழங்குநர்களைத் தெரிவுசெய்வதற்கு பொறுப்பாயுள்ள அமைப்பையும்;

(ii) தெரிவுச் செயன்முறையில் வழங்குநர்களை மதிப்பிடுவதற்கு மேற்கொள்ளப்படும் முறைமையையும்;

(iii) தெரிவுச் செயன்முறையில் விதித்துரைக்கப்பட்ட தகவுதிறன்களை தெரிவுசெய்யப்பட்ட வழங்குனர்கள் கொண்டிருந்தார்களா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4342/ '13

கௌரவ கரு ஜயசூரிய,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எதிர்த்தரப்பு ஆட்களின் தொலைபேசிகளை ஒற்றுக் கேட்பதில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், மேற்கூறப்பட்டவாறு யாருடைய தொலைபெசிகள் ஒற்றுக்கேட்கப்படுகின்றன என்பதையும்;

(iii) மேற்படி தொலைபேசிகளை ஒற்றுக்கேட்பதற்கான காரணத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4417/ '13

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மேல் கொத்மலை நீர் மின் உற்பத்தி நிலையக் கருத்திட்டத்தின் ஆரம்ப திட்டத்திற்கு உரித்தானதாக இருந்த டெவோன், சென்ட் அன்ட்ரூஸ், பூண்டுலு ஓயா, பூனா ஓயா மற்றும் ரம்பொட ஆகிய நீர் மூலங்கள், வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள மேற்படி கருத்திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) இந்நிலைமையின் கீழ் ஆரம்ப திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான மின் உற்பத்தியை, மேற்படி நீர் மின் உற்பத்தி நிலையக் கருத்திட்டத்தின் ஊடாக எதிர்பார்க்க முடியுமா என்பதையும்;

(iii) எதிர்காலத்தில் இவ்வனைத்து நீர் மூலங்களையும் அல்லது அவற்றில் ஒரு பகுதியை, வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள மேற்படி நீர் மின் உற்பத்தி நிலையக் கருத்திட்டத்தின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், அவ்வாறு பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற நீர் மூலங்கள் யாவை என்பதையும்;

(v) தேவைகளுக்கு அமைய மேற்படி நீர் மின் உற்பத்தி நிலையக் கருத்திட்டத்துடன் ஒன்றிணைக்கக்கூடியவாறு மேற்படி நீர் மூலங்களில் அவசியமான நிர்மாணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4436/ '13

கௌரவ (திருமதி) தலதா அத்துகோரல,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி திரிவானாகெட்டியவிலிருந்து அகலவத்த வரையிலான வீதி காபர்ட் இடப்பட்டு அபிவிருத்தி செய்யப்படுகின்றதா;

(ii) அவ்வாறு காபர்ட் இடப்படவுள்ள பாதையின் மொத்த நீளம் எவ்வளவு;

(iii) அதற்காக மதிப்பிடப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு;

(iv) அதற்கான உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டுள்ள நிறுவனங்கள் யாவை;

(v) உடன்படிக்கையின்படி அந்த வீதியின் அபிவிருத்திப் பணிகள் முடிவடையவுள்ள திகதி யாது;

(vi) தற்போது காபர்ட் இடப்பட்டு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள மொத்த நீளம் எவ்வளவு;

(vii) வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள அளவு ஒவ்வொரு கம்பெனிக்கும் அமைய வெவ்வேறாக எவ்வளவு;

(viii) இது வரை இக் கம்பனிகளுக்கு செலுத்தப்பட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?